# வேலையிடக் காயங்களுக்கான இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ், பொய்யான மற்றும் மோசடியான உரிமை கோரிக்கை எழுப்பினால், உங்களுக்கு அபராதமோ அல்லது சிறை தண்டனையோ விதிக்கப்படும்

**வேலையிடக் காயங்களுக்கான இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ், வேலையால் ஏற்படும் காயங்களுக்கு, ஊழியர்கள் தங்கள் முதலாளிகளிடமிருந்து இழப்பீடு கோர முடியும். இருப்பினும் முதலாளிகளும் ஊழியர்களும், அந்த உரிமையைத் தவறாகப் பயன்படுத்தவேண்டாம் என்று அறிவுறுத்தப்படுகிறது. தங்கள் சொந்த நலனுக்காக, சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தியோருக்கு என்ன நேர்ந்தது என்பதை அறிந்துகொள்ளுங்கள்.**

## 1 வேலையிடக் காயங்களுக்கான இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ், தவறான வாக்குமூலங்களை அளித்து, மோசடி செய்த குற்றத்துக்காக ஊழியருக்கு ஆறு வார சிறை தண்டனை

கோவிந்தன் ராஜா (ராஜா) என்ற ஊழியர் வேலை முடிந்த பிறகு, தனது தங்கும் விடுதியின் படிக்கட்டிலிருந்து கீழே விழுந்ததில், அவரது தோள்பட்டையில் காயம் ஏற்பட்டது. தனது காயத்துக்கு இழப்பீடு கோரவேண்டும் என்பதற்காக, வேலையில் இருந்தபோது உயரமான ஓர் இடத்தில் இருந்து விழுந்துவிட்டதாக அவர் பொய்யுரைத்தார்.

வேலையிடக் காயங்களுக்கான இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ், மோசடி செய்த குற்றத்துக்காகவும், மனிதவள அமைச்சிடம் தவறான வாக்குமூலங்களை அளித்ததற்காகவும், அமைச்சு, ராஜா மீது குற்றஞ்சாட்டியது. ராஜா தம் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை ஒப்புக்கொண்டார். அவருக்கு ஆறு வார சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

## 2 வேலையிடக் காயங்களுக்கான இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ், தவறான வாக்குமூலங்களை அளித்த குற்றத்துக்காக, நிறுவனம் ஒன்றின் இயக்குநருக்கு இரண்டு வார சிறை தண்டனை.

நிறுவனம் ஒன்றின் இயக்குநரான வோங் கோக் கோங் (வோங்), நிறுவனக் கிடங்கிலிருந்து பொருட்களை இறக்கிக் கொண்டிருந்தபோது, தமது ஊழியர் வாகனத்தில் இருந்து விழுந்துவிட்டதாகவும், அதனால் காயம் ஏற்பட்டுவிட்டதாகவும், மனித வள அமைச்சின் விசாரணை அதிகாரியிடம் தெரிவித்தார்.

அந்த விபத்து பணியிடத்திற்குள் நடந்தது என்பதை வோங் அறிந்திருந்தார் என்பதையும், ஆனால் விபத்தையும் பணியிடத்தையும் தொடர்புபடுத்த விரும்பாத அவர், விபத்து நடந்த இடம் குறித்து பொய் உரைத்திருக்கிறார் என்பதையும் மனித வள அமைச்சின் விசாரணை புலப்படுத்தியது.

வேலையிடக் காயங்களுக்கான இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ், தவறான வாக்குமூலங்களை அளித்ததற்காக, வோங் மீது மனித வள அமைச்சு குற்றம் சுமத்தியது. தவறை ஒப்புக்கொண்ட அவருக்கு, இரண்டு வார சிறை தண்டனை விதிக்கப்பட்டது.

## 3 வேலையிடக் காயங்களுக்கான இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ், தவறான வாக்குமூலம் அளித்ததற்காக ஊழியருக்கு ஒரு வார சிறை

சிம் ச்வீ சான் (சிம்) என்ற ஊழியர், லாரியிலிருந்து சாமான்களை இறக்கிக் கொண்டிருந்தபோது, சாலைத் தடுப்பு ஒன்றில் தடுமாறி விழுந்து காயம் ஏற்பட்டுவிட்டதாக, மனித வள அமைச்சின் விசாரணை அதிகாரியிடம் தெரிவித்தார்.

உண்மையில் தேநீர் இடைவேளையின்போது சிம் காயமேற்படுத்திக்கொண்டார் என்பதை மனித வள அமைச்சின் விசாரணை புலப்படுத்தியது.

வேலையிடக் காயங்களுக்கான இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ், மனித வள அமைச்சிடம் பொய்யான வாக்குமூலம் அளித்ததாக, சிம் மீது குற்றம் சுமத்தப்பட்டது. தனது தவறை ஒப்புக்கொண்ட சிம்முக்கு ஒரு வார சிறை தண்டனை விதிக்கப்பட்டது.



முக்கிய அறிவிப்பு
வேலையிடக் காயங்களுக்கான இழப்பீட்டுச் சட்டத்தின் கீழ், மோசடி செய்து பணம் கோருவது குற்றம். குற்றம் நிரூபிக்கப்பட்டால், $15,000-க்கு உட்பட்ட அபராதமோ, 12 மாதத்துக்கு உட்பட்ட சிறைதண்டனையோ, இரண்டுமோ விதிக்கப்படலாம். மேலும், தவறான வாக்குமூலம் அளிப்பதும் சட்டப்படி குற்றம். தவறு செய்பவர்களுக்கு $5,000 வரை அபராதமோ, ஆறு மாதத்துக்கு உட்பட்ட சிறை தண்டனையோ இரண்டுமோ விதிக்கப்படலாம்.

மேலும் அதிக விவரங்களுக்கு, http://www.mom.gov.sg என்ற எமது இணையதளத்தைப் பார்வையிடவும்

MINISTRY OF MANPOWER